www.Padasalai.Net www.TrbTnpsc.com

# ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, தமிழ்நாடு

அனுப்புநர் :
க.இளம்பகவத், இ.ஆ.ப.,
திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்,
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்/
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,
சென்னை - 06.

பெறுநர் :
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண்:1519/முகஉதி/ஒபக/2023, நாள்: 21.04.2023**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - அனைத்து வகை அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்துதல் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - தொடர்பாக

**பார்வை:**
1. அரசாணை நிலை எண்: 43, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4 - 1) துறை, நாள்: 27.07.2022.
2. சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - முதலைமைச்சரின் காலை உணவுத் திட்டம் சார்ந்த திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள், நாள்: 27.08.2022.
3. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்: 2223/C7/SMC/ஒபக/2022, நாள்: 07.09.2022.

***********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அரசு பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குதல் குறித்து வெளியிட்ட அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முதற்கட்டமாக 2022-23ஆம் கல்வியாண்டில் மாநகராட்சி, நகராட்சி, கிராம ஊராட்சி மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு செயல்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டமானது 2023-24ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் கீழ்க்காணும் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- மாணவர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்
- மாணவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருத்தலை உறுதி செய்தல்
- மாணவர்கள் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் குறிப்பாக ரத்த சோகை குறைபாட்டினை நீக்குதல்
- பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல் மற்றும் கல்வியில் தக்க வைத்துக் கொள்ளுதல்
- வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணி சுமையை குறைத்தல்

மேலும், பார்வை - 1யில் காணும் அரசாணை மற்றும் பார்வை-2யில் காணும் திட்ட செயலாக்க நெறிமுறைகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து திட்ட செயலாக வழிகாட்டு நெறிமுறைகளும் மற்றும் பார்வை-3யில் காணும் கடிதத்தில் இத்திட்டம் சார்ந்து பள்ளி அளவில் திட்ட செயலாக்கம் (School Level Execution) பற்றி செயல்முறைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் சிறப்பாக செயல்பட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மூலம் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கீழ்க்காணுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கீழ் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), உதவித் திட்ட அலுவலர்கள் (தொடக்கக் கல்வி), அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (தொடக்கக் கல்வி), அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), அனைத்து வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் அனைத்து தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் செயல்படுவார்கள்.
- மாவட்ட அளவில் ஏற்கனவே தொடக்கக் கல்வித்துறையில் மாற்றுப்பணியில் பணிபுரிந்து வரும் மாவட்ட ஒருங்கிணைபாளருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணி ஒதுக்கிடு செய்யப்பட வேண்டும். இவர்கள் மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) வழிகாட்டுதலின்படி செயல்பட வேண்டும்.
- மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) தனக்கு கீழ் செயல்படும் மாவட்ட ஒருங்கிணப்பாளர்கள் (தொடக்கக் கல்வி), அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), அனைத்து வட்டார

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களை இத்திட்டத்தில் இணைத்தல். மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் சென்றடைவதை உறுதி செய்தல் வேண்டும்.

- முதன்மைக் கல்வி அலுவலர்கள், ஒவ்வொரு வட்டார வளமைய அளவில் ஓர் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரை முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப்பணியைக் கண்காணிக்க பொறுப்பு அலுவலரை நியமிக்க வேண்டும்.

எனவே, தொடக்கக் கல்வித்துறையோடு இணைந்து ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட இயக்ககத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டம் சார்ந்த அவ்வப்போது தெரிவிக்கப்படும் அறிவுரைகளை முறையாக நடைமுறைப்படுத்தவும் மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை சரியாக பின்பற்றவும் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

21/4/23

திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்

21.04.23

இணைப்பு: முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்

ந.க.எண்: 359/ஆபக/DC8/2023 நாள் 21.4.2023

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்க நிலை)
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ)
4. அனைத்து வகை அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் (வட்டாரக் கல்வி அலுவலர்கள் வழியாக)

முதன்மைக் கல்வி அலுவலர்
திருச்சிராப்பள்ளி.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com